உ

சிவமயம்



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

## திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுச் சிமிழ்

02.06.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுச் சிமிழ்

02.06.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

மக்கள் எழுவரை மேதினியில்

உயரவைத்துபெரும் பணிசெய்த எம் அன்னையே

குலதெய்வம் கும்பிட்டே கொழயவினையகல

கொண்ட தொண்டுகள் மறப்போமோ

நிலையில்லா உலகிதனில் நெறிநின்று

வாழவிட்டு இறைவன் அழயிருக்க சென்றவரே


ஏற்றிடுவீர் இம்மலரை

காணிக்கையாகவே

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 - 03 - 1921 |  | 03 - 05 - 2007 |

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா

அவர்களின்

## திதி வெண்பா

ஆண்டதுவாம் சர்வசித் தமைந்த சித்திரையில்
மூண்ட வமரபக்க பிரதமையில் – வேண்டிநின்று
செல்லம்மா நல்லாள் சேர்ந்தாளே சிவனடியை
தொல்லுலகு பற்றுவிட்டே தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

## திருமுறைத் தோத்திரப் பாடல்கள்

# பஞ்சபுராணம்

### தேவாரம்

கலை ஞானங் கல்லாமே கற்பித்தானைக்
கடு நரகஞ்சாரமே காப்பான் தன்னைப்
பலவாய வேடங்கள் தானே யாகிப்
பணிவார்கட் கங்காங்கே பற்றானாகிப்
சிலையாற் புரமெரித்த தீயாடியைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிலையார் மணிமாட நீரோனை
நீ தனே னென்னே நான் நினையாவாறே

### திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி
னாற் கலந் தாண்டு கொண்ட
விடையவனே விட் டிடுதிகண்
டாய் விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தர
கோச மங்கைக் கரசே
சடையவ னேதளர்ந்த தேன் எம்பி
ரானென்னைத் தாங்கிக் கொள்ளே

### திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம் பொன்செ யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போ யகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப் பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்
டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போது உன்னடியின்
கீழ்இருக்க என்றார்.

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கை கணையாலே
தொல்லை நெடு நீளக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருவு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் திறலோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்கதி அருளுமாறு வழிபட்ட தெய்வங்கள் மீது வேண்டுதல்

## வளவிலிருக்கும் குலதெய்வம் – காளி

மாமரங்கள் கனிசொரிய மந்தியினம் பந்தெறிய
மேவு மீசாலை வளவினிலே அமர்ந்தவளே குலதெய்வம்
தேவி அம்மா துர்க்கா காளி தேடி நிதம் பணிந்தே பக்தை
பூவுடனே வந்திடும் செல்லம்மாவுக்கு நீ சாந்தி தருவாய்

ஓடி ஓடிப் பூப்பறித்து ஒவ்வோர் தினமும் நினை அழைத்து
நாடி வந்து உறவினரை நற்பணிகள் செய்யவைத்து
கூடி நின்னை அழைக்கும் குரல் அம்மா என்றே ஆயிரமாய்
கோடி முறை கூவிநின்ற செல்லம்மாவுக்கு சாந்தி தருவாய்.

## மீசாலை வெள்ளை மாவடியின் மீது வேண்டுதல்

மெல்ல அசைந்து கனிமரங்கள் மேன்மையுடன் பாடிநிற்க
வள்ளலென அமர்ந்து அருள் செய்பவனே நீலகண்ட
வெள்ளை மாவடிப் பிள்ளையாரே இன்னமில்லாள் செல்லம்மா
உள்ள முருகி அழைத்தாளே ஆத்ம சாந்தி தந்திடுவாய்.

## மீசாலைக் கரும்பி மாவடிக் கந்தன் மீது வேண்டுதல்

தென்னை பனை கமுகு பலா தேன்கதலி மாவினொடு
வண்ண மலர்கள் தாம் சொரிய வாசல் கடம்பு தாள் கமழ
நன்னகராம் மீசாலை கரும்பி மாவடிக் கந்தா நின்னை
அன்னை செல்லம்மா அழைப்பாளே ஆத்மசாந்தி தந்திடுவாய்.

> இன்னொருவர் வேதனை
> இவர்களுக்கு வேடிக்கை!
> இதயமற்ற மனிதருக்கு
> இதுவெல்லாம் வாடிக்கை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்.....

இந்து சமுத்திரத்தின் நித்திலமாம்
ஈழம் அதில்
கிரீடமாய் விளங்கும்
யாழ்.மாவட்டமதில்
தெங்கு பல நிறைந்த
தென்மராட்சிப் பிரிவினிலே
மா சோலை எழில் செய்யும்
மீசாலை அம்பதியில்
வேலுப்பிள்ளை என்றும் காராளர்
காசிப்பிள்ளை என்னும்
குலக்கொடியை மணந்து
செல்லம்மா என்னும்
நல்லணங்கைப் பெற்றெடுத்தார்
வெண்ணிலவையொத்த
எழிலான முகவதனி
கயல்மீனையொத்த
கவினான கண்ணழகி
மின்னல் இடையழகி
மாண்புமிகு செல்லம்மாவிற்கு
ஐந்து சகோதரர்கள்
பூவுலகில் வந்துதித்தார்
மங்கைப் பருவமதை
செல்லம்மா எய்துகையில்
வல்லிபுரம் தம்பதியர் பெற்றெடுத்த
காளையாம் சுப்பிரமணியம் ஆண்டகைக்கு
பொன்னழகு மங்கை
செல்லம்மா எனும் பைந்தொடியை
மணம் முடித்து வைத்தார்கள்
மாண்பு மிகு உறவினர்கள்
சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியர்
ஆறுமுகன் திருவருளால்
ஏழு மழலைகளைப் பெற்று
மாநிலம் போற்ற வாழ்ந்தனரே
மூத்தமகள் மகேஸ்வரிக்கு
கன்னிப் பருவமதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெசவாசிரியர் கந்தசாமிக்கு
வதுவை செய்து வைத்தார்கள்
அடுத்த மகன் வல்லிபுரம் அவர்க்கு
கமலாதேவி எனும் மருக்கொழுந்தை
மணம்முடித்து இன்புற்ற பெற்றோர்கள்
இனிய மகள் பரமேஸ்வரிக்கு
வைரமுத்து என்னும் மில் உரிமையாளரை
கைப்பிடித்து வைத்தார்கள்
அன்பு மகள் ஆசிரியை பொன்னம்மாவிற்கு
பத்திரிகை இதழாசிரியர்
பெஞ்சமின் இராசரத்தினம் எனும் ஆண்டகைக்கு
மணம் முடித்து வைத்து
மகிழ்ந்தார்கள் பெற்றோர்கள்
அடுத்த மகன் இராசரத்தினம் பிறந்து
வளரும் வேளையில்
அகவை பதின்மூன்றில்
காலனவன் கவர்ந்து சென்றான்
செல்ல மகன் பரமசாமிக்கு
காசினி போற்றும் கமலேஸ்வரியை
வதுவை செய்து வைத்து
பூரித்தார் பெற்றோர்கள்
முத்தைப் பழிக்கும் மதிவதனி
ஆசிரியை இரத்தினபூபதிக்கு
இ.போ.ச. ஊழியர்
மாண்புமிகு நாகேந்திரன் அவர்களை
மணப் செய்து வைத்தனரே
சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியர்
இருபத்தொரு பேரப்பிள்ளைகளைப் பெற்று
தாலாட்டிச் சீராட்டி
மகிழ்ந்திருந்த வேளையில்
இருபத்தைந்து பூட்டமக்கள்
புவனியில் வந்துதித்தார்
வெளிநாட்டுப் பேரன் பாலமுரளி
உவந்தளித்த சங்கிலியை
களற்றாமல் அனுதினமும் அணிந்து
பொன்னம்மா இல் இருந்து
தள்ளாத வயதினிலும்
அதிகாலைச் சமையலுக்கு
விருப்புடனே உதவிடுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்குட்டி பூபதியை
காணாமல் துடிதுடித்து
அடிமடியில் கட்டிவைத்த
தீன்பண்டம் அளித்திடுவார்
அகவை அறுபத்தாறு
செல்லம்மாவிற்குவந்தவேளை
கணவர் சுப்பிரமணியத்தை
காலனவன் கவர்ந்து சென்றான்
கணவனைப் பிரிந்து
துடிதுடித்த அன்னை
பிள்ளைகள் பேரர்கள் பூட்டர்கள்
அரவணைப்பில்
துன்பத்தை மறந்து
இன்புற்ற வேளையில்
மீண்டும் ஓர் இடி வந்து வீழ்ந்ததுவே
மூத்த மகன் வல்லிபுரம்
குடும்பச் சுமை தன்னை
சலிக்காமல் சுமந்து
மெழுகுவர்த்தியாய் இல்லமதில் திகழ்ந்து
பார்போற்ற வாழுகையில்
அமரத்துவம் அடைந்த துயர்
தாயவளை வாட்டியதே
மகனாக இருந்து
மனைமாட்சி புரிந்த
மருமகனாம் வைரமுத்து
கடந்த வருடமதில்
காலவனவன் கைப்பட்டான்
இத்துயரம் செல்லம்மாவின்
பூ உள்ளத்தை
புயலாக வாட்டியதே
துன்பமதைப் போக்க
ஆத்மீகப் பாதையிலே
கால்பதித்தே வாழ்ந்திருந்தார்
அல்லும் பகலும் குலதெய்வம் காளிக்கு
மலரெடுத்து மாலையிட்டு
"**மானே கூப்பிடு மானே கூப்பிடு**" என
மலர் பறித்த வேளையிலே
மயக்கமுற்று வீழ்ந்து
ஒரு வாரம் செல்லுமுன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புமகன் பரமசாமி இல்லமதில்
விருப்புடனே தங்கி
அகவை எண்பத்தாறாதனில்
அரனடி சேர்ந்தார்
செல்லம்மா அம்மை அவர்
பிள்ளைகள் கதறியழ
பேரர்கள் விம்மியழ
பூட்டர்கள் பரிதவிக்க
காளியின் கழலடைந்த
செல்லம்மாவின் ஆத்மா
சாந்தியுறப் பிரார்த்திப்போம்
மக்கள் அனைவருமே

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

## தேற்றம்

பிறந்தார் யாவரும் போவார் திண்ணமே
மறந்தால் மறக்க முடியாத மாதாவை
கறந்த பாலெனக் கற்றோம் வாழ்வு தனை
சிறந்திடுக சிவனடியில் என்றே சேவிப்போம்.

## ஆண்டு நிறைவு விழாக்கள்

1. **தசரவிழா** - 10 ஆண்டுக்கு ஒருமுறை வருவது
2. **வெள்ளிவிழா** - 25 ஆண்டுக்கு ஒருமுறை வருவது
3. **பொன் விழா** - 50 ஆண்டுக்கு ஒருமுறை வருவது
4. **மணி விழா** - 60 ஆண்டுக்கு ஒருமுறை வருவது
5. **பவள விழா** - 75 ஆண்டுக்கு ஒருமுறை வருவது
6. **அமுதவிழா** - 80 ஆண்டுக்கு ஒருமுறை வருவது
7. **நூற்றாண்டுவிழா** - 100 ஆண்டுக்கு ஒருமுறை வருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும், மருத்துவமும்

1. மாரடைப்பு நோயை அறியும் பரிசோதனையாகிய E.C.G யின் பின்பு செய்யப்படும் சிகிச்சை முறை யாது?

Angiography

2. நுண்ணிய ஒலி அலைகளைப் பயன்படுத்தி நோய்களை இனம்காணும் கருவி எது?

Scaner **(அலகிடலி)**

3. சிறுநீரக கற்கள் (Kidney stones) என்பதன் இரசாயனப் பெயர் யாது?

**கல்சியம் ஒட்சலேற்று**

4. எயிட்ஸ் நோயைக் கண்டுபிடித்தவர் யார்?

**லொக் மொனிட்டர்**

5. இதய மாற்றுச் சிகிச்சையை முதன்முதலில் செய்து முடித்த வைத்திய நிபுணர் யார்?

Dr. **கிறிஸ்டியன் பேனாட்**

6. இரத்த வங்கியின் குருதி உறையாமல் இருக்கப் பயன்படுவது எது?

**சோடியம் சித்திரேற்று/சோடியம் ஒட்சலேற்று**

7. மருந்து இல்லாமல் நோயைத் தீர்க்கும்முறை எவ்வாறு கூறப்படும்?

**ஒஸ்ரியோபதி**

8. சிறுநீரைச் சோதிக்கும்போது எப்பொருள் இருப்பது ஒருவரில் நோய் இருப்பதன் அறிகுறியாகும்?

**அல்புமின்**

9. உலகின் முதலாவது சோதனைக் குழந்தையின் பெயர் என்ன?

**லூசி பிறவுன் (1978)**

10. மருத்துவத்தின் தந்தை யார்?

**கிப்போகிரட்டிஸ்**

### உலகப் பெருந்தவறுகள்

- உழைக்காமல் ஈட்டிய செல்வம்
- மனச்சாட்சி இல்லாத இன்பம்
- பண்பு இல்லாத அறிவு
- மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்
- தியாகம் இல்லாத வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகம் தொடர்பான நோய்கள்

## சிறுநீர செயலிழப்பு

1. சிறுநீரகங்கள் பழுதடைந்திருப்பதற்கான காரணியைக் கண்டுபிடித்து அதற்கு சிகிச்சை அளித்தல்வேண்டும்

2. நாட்டபட்ட சிறுநீரக செயலிழப்பு **(Chronic Renal Failure CRF)** சிறு நீரகங்கள் உடல் சமனிலையைப் பேணமுடியாது போகும் நிலை யாகும். இதன்போது சிறுநீரகங்கள் தொடர்ச்சியான மீளமுடியாத பாதிப்பு உள்ளாகி ஒரு நிலையில் முற்றாக செயலிழக்கிறது. இவ் இறுதிநிலையே சிறுநீரக செயலிழப்பு **(End Stage Renal Failure)** ஆகும்.

3. சிறுநீரக செயலிழப்பிற்கான சிகிச்சையானது சிறுநீரகங்களைப் பழையநிலைக்குக் கொண்டு வராது. ஆனால் ஏற்படும் பாதிப்புக்களைத் தாமதமாக்கி இறுதிநிலை சிறுநீரக செயலிழப்பு ஏற்படுவதை தாமதமாக்கும்.

## சிறுநீரகத்தைப் பாதுகாத்தல்

1. அதிகளவு நீர் அருந்துதல்
2. கொதித்தாறிய நீர் அருந்துதல்
3. பொற்றாசியம், சோடியம் கூடிய உணவு வகைகளைத் தவிர்த்தல்
4. பராசிற்ற மோல்(பனடோல்) போன்ற மருந்துகளை ஆங்கில வைத்தியரின் ஆலோசனைக்கு அமைவாக எடுத்தல்
5. தோல் நோய்கள் உடலில் சொறி, சிரங்கு, புண்கள் ஏற்படின் உடன் சிகிக்சைபெறல்.
6. சிறுநீரக தொற்று ஏற்படின் உடன் சிகிச்சை பெறல்

**மனிதப் பண்புகள்**

ஏழ்மையிலும் நேர்மை வேண்டும்
கோபத்திலும் பொறுமை வேண்டும்
தோல்வியிலும் விடாமுயற்சி வேண்டும்
தரித்திரத்திலும் பரோபகாரம் வேண்டும்
துன்பத்திலும் தைரியம் வேண்டும்
செல்வத்திலும் எளிமை வேண்டும்
பதவியிலும் பண்பு வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ms - office இல் உங்கள் வேலைகளை விரைவாக்குவதற்கு சிறு குறுக்கு வழிகள்

எம்.எஸ்.ஒவ்வீஸில் (Ms Office) உங்களது தகவல்களையும் கட்டளையும் உள்ளீடு செய்வதில் மவுஸைப் பயன்படுத்துவதை விட கீபோட்டிலுள்ள குறுக்குவழிகளைப் பயன்படுத்துவதன் மூலம் உங்களது வேலைகளை விரைவாகச் செய்ய முடியும். அப்படிச் செய்வதற்குரிய சில குறுக்கு வழிகள்.

Ctrl+S :- வேலை செய்து கொண்டிருக்கும் ஃபைலை சேமித்து வைப்பதற்கு

Ctrl+C :- குறிப்பிட்ட பகுதியை பிரதி (Copy) பண்ணுமுகமாக கிளிப்போர்டிற்குச் செல்வதற்கு

Ctrl+X :- குறிப்பிட்ட பகுதியை ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு மாற்றம் செய்யும் பொருட்டு கிளிப்போர்டிற்குக் கொண்டு வருவதற்கு

Ctrl+V :- கிளிப்போர்ட்டிற்கு கொண்டு சென்ற பகுதியை தேவையான இடத்திற்குக் கொண்டு செல்வதற்கு

Ctrl+Z :- கடைசியாகச் செய்த வேலையை இல்லாமல் செய்வதற்கு

Ctrl+B :- ஒரு குறிப்பிட்ட பகுதியை தடிப்பான எழுத்திற்கு மாற்ற

Ctrl+U :- ஒரு குறிப்பிட்ட பகுதியை கீழ்க்கோடிட்டுக்காட்ட

Ctrl+I :- குறிப்பிட்ட பகுதியை சாய்வான எழுத்திற்கு கொண்டு வர

Ctrl+L :- தெரிவு செய்யப்பட்ட அனைத்து வரிகளும் இடதுபுறமாக ஒரு நேரான அமைப்புக் கொண்டுவர

Ctrl+R :-தெரிவுசெய்யப்பட்ட அனைத்து வரிகளும் வலப்புறமாக ஒழுங்கு செய்வதற்கு

Ctrl+J :- தெரிவு செய்யப்பட்ட அனைத்து வரிகளும் இரண்டு பக்கங்களிலும் ஒரு நேரான அமைப்பிற்கு கொண்டு வர

Ctrl+E :- தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வரிகளையும் அப்பக்கத்திற்கு மையமாகக் கொண்டு வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ctrl+N :- புதியதொரு பைலை பெறுவதற்கு

Ctrl+O :- ஏற்கனவே செய்துள்ள பைலை திறப்பதற்கு

Ctrl+D :- எழுத்துப்பெட்டி (பொன்ட் பொக்ஸ்) க்குச் செல்வதற்கு

Ctrl+A :- செலேக்ட் ஓல் (Select All) செய்வதற்கு

Ctrl+F :- ஃபைன்ட் அன்ட ரிபிளேஸ் டயலொக் பொக்ஸுக்குப் போவதற்கு

Ctrl+K :- இன்ஷேர்ட் ஹைய்ப்பலிங்க் டயலொக் பொக்ஸுக்குப் போவதற்கு

Ctrl+P :- அச்சுப்படுத்தி (சேவை) எடுப்பதற்கு

Ctrl+W :-வின்டோஸ் டொக்குயுமென்டை மூடுவதற்கு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு (Close)

Ctrl+Y :- அன்டு (Undo) தைப்பிங் மூலம் நீக்கியதை மீளக்கொண்டு வருவதற்கு (Redo)

Ctrl+1 :- ஒரு வரி இடைவெளி விடுவதற்கு

Ctrl+2 :- இரு வரி இடைவெளி விடுவதற்கு

Ctrl+5 :- 1 ½ வரி இடைவெளி விடுவதற்கு

Ctrl+} :- தெரிவு செய்த எழுத்துக்களை அடுத்து எழுத்தின் அளவுக்குப் (Font Size) பெரிதாக்குவதற்கு

Ctrl+{ :- தெரிவு செய்த எழுத்துக்களை அடுத்து எழுத்தின் அளவுக்குப் (Font Size) சிறிதாக்குவதற்கு

## பெருமைப்பட வேண்டும்

பத்து திங்கள் சுமந்தாளே - அவள்
பெருமைப் படவேண்டும் - உன்னைப்
பெற்றதனாலே மற்றவரால் அவள்
போற்றப்பட வேண்டும்
கற்றவர் சபையில் உனக்கெனத் - தனி
இடமும் தர வேண்டும் - உன்
கண்ணில் ஒருதுளி நீர்வழிந்தால் - இந்த
உலகே அழ வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளம் கனிந்த
# நன்றி நவிலல்

எமது குடும்பததின் மணிமகுடமாகத்
திகழ்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழந்து
எம்மையெல்லாம் ஒளிவிளங்கச் செய்த அன்பு
அம்மாவின் ஆத்மசோதி பரஞ்சோதியுடன்
கலக்கும வேளையில் அருகமர்ந்து துயர்
களைந்தோர் ஆறுதலும் அஞ்சலியும்
நல்கினோர், கண்ணீர் அஞ்சலி மூலம்
அனுதாபங்களைத் தெரிவித்த யா/சாவக்சேரி
இந்துக்கல்லூரி பாடசாலை சமூகத்தினர்,
யா/மீசாலை வீரசிங்கம் ம. வி. பாடசாலை
சமூகத்தினர் , தொலைபேசி மூலம்
அனுதாபங்களை தெரிவித்தோர்
இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி,
சபிண்டீகரண கிரியை என்பவற்றை முறைப்படி
நடாத்திய அந்தணக் குருமார் அதில் கலந்து
கொண்ட அன்புள்ளங்கள் யாவருக்கும்
எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்

நன்றி


மீசாலை மேற்கு
மீசாலை.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Guru Printers' 39/2, Adiyapatham Road, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம்சாவழி

**வேலுப்பிள்ளை + காசிப்பிள்ளை**

...லம்மா

இராசையா + இராசம்

கந்தையா + திலகவதி

சிவக்கொழுந்து + சபாபதிப்பிள்ள்ளை

பொன்னம்மா (அமரர்)

சிதம்பரப்பிள்ளை + ஞானாம்பிகை

---

இராசரத்தினம் (அமரர்)

பரமசாமி + கமலேஸ்வரி
- அயூரன்
- கண்ணன்
- பகீரதி
- தர்சிகா

இரத்தினபூபதி + நாகேந்திரன்
- நிரோஜன்
- ஆஷாயினி
- தஷாயினி

---

கவிதா + வரதராஜன்
- கிரிசாளினி

வனஜா + காங்கேசு
- வியாஸ்
- விசாளி
- விபுலன்

வாசினி + தயாபரன்
- லிஜிந்தன்
- நிசாந்தன்
- லெபினா

தர்சினி + பஞ்சலிங்கம்
- ஜீவதரன்
- சபேசன்

குகன் (அமரர்)

றேணுகா + பாலகுமார்
- சர்மிலன்
- ஜெனந்தன்
- சரணியா
- கௌசிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது,
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்."



**இதுவே உலக நியதியும்,**
**எனது படைப்பின் சாராம்சமுமாகும்.**

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org